**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**STC.No.**

**Prosecution Witness : 1**

சாட்சி : கீதாஞ்சலி
சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் குடியிருப்பது திண்டுக்கல் தாலுகா என்றால் சரிதான். எதிரி குடியிருப்பது ஆத்தூர் தாலுகா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மனுவில் எனக்கும் எதிரிக்கும் நல்ல பழக்கம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எவ்வாறு பழக்கம் என்றால் எனது அக்கா வீட்டிற்கு எதிர் வீட்டில் எதிரி குடியிருக்கிறார். இந்த விபரத்தை எனது மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அக்கா பெயர் ஹேமலதா என்றால் சரிதான். ஹேமலதா எதிரிக்கு 20 லட்சம் காசோலை மூலம் கொடுத்ததாக சொல்லி தன் மகள் ஷபியா என்பவர் மூலம் இதே நீதிமன்றத்தில் STC 1499/2023 என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. எனது மகள் பெயர் சுந்தரி என்றால் சரிதான். மருமகன் பெயர் அரவிந்தன் என்றால் சரிதான். எனது மகள் சுந்தரியும், மருமகன் அரவிந்தனும் சேர்ந்து எதிரிக்குச் சொந்தமான வீட்டை கிரையம் செய்து கொள்வதாக ஒரு கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்குதெரியாது. சுந்தரியும், அரவிந்தனும் சேர்ந்து எதிரி மீது திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் OS 37/2023 என்ற நம்பரில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கேட்டு ஒரு வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது மருமகன் அரவிந்தன் எதிரியின் வீட்டை வாங்குவதற்காக ஏற்படுத்திக்

கொண்ட பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் திண்டுக்கல் ICICI வங்கி கிளையில் 16 லட்சம் பணம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது அக்கா ஹேமலதா தாக்கல் செய்துள்ள வழக்கும், எனது மகளும், மருமகனும் தாக்கல் செய்த வழக்குகள் குறித்து எனக்கு நன்கு தெரிந்தும் வேண்டுமென்றே தெரியாது என்று தவறுதலாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நோட்டீஸ் அனுப்பியதாக சொல்லப்படும் காலகட்டத்தில் 09.05.2023ம் தேதி எனது மகள் சுந்தரி காந்திகிராமம் தபால் அலுவலகத்தில் போஸ்டல் டெலிவரி Women ஆக வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. செம்பட்டியில் பணிபுரிந்தார். என்னிடம் காட்டப்படுவது நான் தாக்கல் செய்த தனிப்புகார் என்றால் சரிதான். எதிரிக்கு நான் புரோ நோட் மூலம் முதலில் 30 லட்சம் கடன் கொடுத்ததாக மேற்படி புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கடன் கொடுத்த விபரம் எனது கணவருக்குத் தெரியுமா என்றால் தெரியும், அந்த புரோ நோட்டில் எனது கணவர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். புரோ நோட்டில் சாட்சி கையொப்பம் செய்த இரண்டு நபர்களில் ஒரு நபர் திண்டுக்கல்லைச் சேர்ந்தவர், மற்றொரு நபர் தாடிக்கொம்பு அய்யம்பாளையத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களையும் நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் டிராக்டர் ஷோரூமிள் டேட்டா ஆப்ரேட்டராக வேலை செய்கிறேன். ஏற்கனவே புரோ நோட் மூலம் வேறு நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எதிரிக்கு கொடுத்த புரோ நோட்டில் வட்டி கொடுத்தாரா, எவ்வளவு வட்டி போன்ற விபரங்கள் புகாரில் இல்லை என்றால் சரிதான். ஆனால் 1 ரூபாய் வட்டிக்காக கொடுத்துள்னேன். அந்த புரோ நோட்டை எதிரிக்கு திரும்ப கொடுத்துவிட்டு , மேற்கொண்டு 20 லட்சம் திரும்பபும் எதிரிக்கு கடனாக கொடுத்ததாக புகாரில் சொல்லியுள்ளேன்

என்றால் சரிதான். எனவேதான் எதிரி 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையை எனக்கு கொடுத்ததாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இரண்டாவது முறை 20 லட்சம் கொடுத்து 50 லட்சம் ரூபாய்க்கு எதிரி செக் கொடுத்ததாக சொல்லப்படுவதற்காக சாட்சிகள் இருப்பதாக நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி 50 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு செக் கொடுத்த விபரம் எனது கணவருக்குத் தெரியுமா என்றால் தெரியும். அந்த விபரத்தை நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் 30 லட்சத்திற்கு வட்டி கொடுத்ததாக சொல்லிவிட்டு இரண்டாவதாக கொடுத்த 20 லட்சத்திற்கு என்ன மறுபயன் வட்டி எவ்வளவு என்றால் 1 ரூபாய் வட்டி. இந்த விபரத்தை நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி 50 லட்சத்திற்கு வட்டி கொடுத்தாரா என்றால் இல்லை. 50 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு என்ன வருமானம் உள்ளது என்றால் எனக்கு 4,5 வீடுகள் உள்ளது. ஒத்திக்கு வைத்துள்ளேன். பேங்கில் நகை அடமானம் வைத்து அந்த பணத்தையும் கொடுத்தேன். எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் இடம் வாங்க, விற்க தரகர் வேலை செய்து வருகிறார். நான் தாக்கல் செய்த புகாரில் நான் நகைகளை அடமானம் வைத்தது, 4,5 வீடுகள் உள்ளதும் மேற்படி வீடுகளை ஒத்திக்கு விட்டதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2018-2019 ம் வருடம்தான் எனக்கும் வருமானம் இருந்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன்,ஆனால் எதிரிக்கு பணம் கொடுத்தது 2023 ம் வருடம் என்றால் சரிதான். எனது கணவர் நிலம் வாங்கி விற்பதால் எப்போதுமே எங்கள் வீட்டில் பணம் இருக்கும். எப்போதுமே பணம் இருக்கும் என்றாலும் அது எனது கணவரின் பணம் என்றால் எங்கள் இருவரின் பணம்தான். எனது கணவரின் பணத்தை கடன் கொடுத்தபோது அவரை ஏன் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் 3 வது நபர்கள்தான் கையொப்பம் செய்யவேண்டும் என்று சொன்னதால் எனது கணவர் கையொப்பம் செய்யவில்லை. எதிரிக்கு நான் 50

லட்சம் கொடுத்ததை காட்டுவதற்ககும், எனக்கு அவ்வளவு பணம் கொடுத்தற்கு போதுமான பணம் Account ல் இருந்ததற்கும் காட்டுவதற்கு வங்கி Statement எதும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் நகை அடகு வைத்ததற்கோ, வீட்டை ஒத்திக்கு விட்டதற்கோ எந்த ஆதாரங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். அந்த பணத்தைத்தான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படுவது பொய், அதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால் சரியல்ல. எதிரி தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். எனது புகாரில் எதிரியும் எதிரியின் வீட்டாரும் கார் வாங்கி விற்பதற்காகவும், நிலம் வாங்கி விற்பதற்காகவும் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தனியார் நிறுவனத்தில் டேட்டா எ்ன்ட்ரி ஆபரேட்டர் வேலை செய்வதால் பதிவு தபால் எவ்வாறு அனுப்பவேண்டும் என்ற நடைமுறை எனக்குத் தெரியும் என்றால் சரிதான். ஒப்புதல் அட்டையுடன் சேர்த்துத்தான் பதிவு தபால் அனுப்பப்படும் என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் பதிவுத்தபாலுடன் ஒப்புதல் அட்டை வைத்து தபால் அனுப்பியுள்ளார். அந்த ஒப்புதல் அட்டை என்ன ஆனது என்றால் அது திரும்ப வரவில்லை. எனக்கு பதிவுத்தபால் மூலம் தபால்கள் வரப்பெற்றுள்ளதா என்றால் ஆம். பதிவு தபால் வரும்பொழுது ஒப்புதல் அட்டையிலும், டெலிவரி சிலிப்பிலும் கையொப்பம் பெறப்படும் என்றால் சரிதான். பதிவுத்தபால் வரவில்லை என்று தபால் நிலையத்திற்கு நான் தகவல் கேட்டுள்ளேனா என்றால் கேட்டேன். பதிவுத்தபால் அனுப்பியதற்கான ஒப்புதல் அட்டை எனக்கு கிடைக்கவில்லை என்றும், அதற்காக தபால் நிலையத்தில் இருந்து டிராக் ரெக்கார்டு வாங்கி இவ்வழக்கில் தாக்கல் செய்வதாக புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். டிராக் ரெக்கார்டு தாக்கல் செய்வதாக புகாரில் ஆவணப்பட்டியலில்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பியதாக சொல்லப்படும் பதிவுத்தபால் எதிரிக்கு

கிடைக்கவே இல்லை, எதிரி வாங்கவே இல்லை என்றால் சரியல்ல. எதிரி அதை வாங்கியதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பியதாக சொல்லப்படும் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் எதிரியின் கையொப்பம் பெறப்படவில்லை. அதனால்தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி எதிரிக்கு அனுப்பவேண்டிய டிமாண்டு நோட்டீஸ் அவருக்கு கிடைக்கப்பெறாததால் நான் மனுவில் கோரியபடி எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் எதிரி எந்த பணமும் எனக்கு செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலை எனது மருமகனுக்கும், எதிரிக்கும் இடையே நடந்த பணப்பரிவர்த்தனைக்காக வெறும் கையொப்பம் மட்டும் போடப்பட்டு, மற்ற விபரங்கள் நிரப்பப்படாமல் கொடுக்கப்பட்ட காசோலை என்றும், அதை நானும், எனது மருமகனும் தன்னிச்சையாக பூர்த்தி செய்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.10 19:13:21 +0530

Judicial Magistrate No.II(FAC)
Dindigul.